திரு. பெ. சு. திருவேங்கடம் : பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கம் நிர்ணயித்து இருக்கின்ற விலை நியாயமானது என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். ஒருக்கால் இன்றைய மார்க்கெட்டுக்கு அது நியாயமாகக் கூட இருக்கலாம். ஆனால் புதிதாக நிறைய பேர்கள் தொழில் செய்ய முன்வரவேண்டும் என்பதுதான் அரசாங்கத்தின் நோக்கம். அப்படித் தொழில் செய்ய வருபவர்களுக்கு, அதிலும் புதிதாக வருபவர்களுக்கு அல்லது பின் அடைந்த நிலையில் உள்ள வகுப்பினர்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு என்று இப்படி யாராவது முன் வந்தால், அவர்களுக்குச் சலுகைகள் காட்டுகின்ற வகையில், அவர்களுக்கு மட்டும் விலை நிர்ணயம் செய்வதிலே ஒரு தனித் திட்டத்தை அரசாங்கம் கடைப்பிடிக்குமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : பேரவைத் தலைவர் அவர்களே, சலுகை காட்டும் திட்டம் எதுவும் தற்போது இல்லை, ஆனால் அதனுடைய விலை நிர்ணயிக்கின்றபோது, அடுத்த தொழிற்பேட்டையில் உள்ள நிலத்தினுடைய விலையைப் பார்த்து அதற்குத் தகுந்தாற்போல் இந்த இடத்தின் விலையும் நிர்ணயிக்கப்படுகின்றது,

தஞ்சை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்கும் திட்டம்.

497 —

*வினா எண். 22031 — திரு, இரா. தாமரைக்கனி : மாண்புமிகு ஊரகத் தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) தஞ்சை மாவட்டத்தில் தொழிற்பேட்டை அமைக்க அரசிடம் செயற்குறிப்புள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மதிப்பீடு எவ்வளவு ?

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டம். விவசாயிகள் அதிகமாகவுள்ள பகுதி. அந்தப் பகுதியில் பெரிய தொழில்கள் செய்யக்கூடிய தொழில் பேட்டைகள் அமைக்க திட்டம் எதுவும் இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அவ்வாறு தொழிற்பேட்டை என்று இல்லாவிட்டாலும், சிறு தொழில்கள் தொடங்க அரசு ஆவன செய்யுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

1984 மார்ச் 28]

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறைந்தது 10 தொழில் முனைவர்கள் நல்ல தொழில் திட்டங்களின் கீழ் தொழில் தொடங்க முன் வந்தால், சிட்கோ மூலமாக அவர்களுக்காக சின்னஞ்சிறு தொழிற் கூடங்களைக் கட்டிக் கொடுக்க அரசு முயற்சி செய்யும்.

(முற்பகல் 9-50)

திரு. செ. இராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் திருப்பனந்தாளில் 110 ஏக்கர் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஏறத்தாழ 15 ஆண்டுக் காலமாக அப்படியே இருக்கிறது. 5 ஏக்கர் நிலத்தில் மட்டும் சிறு தொழில்கள் துவங்கப்பட்டுள்ளன. மீதி ஏறத்தாழ 105 ஏக்கர் நிலம் அப்படியே இருக்கிறது. அந்த 105 ஏக்கர் நிலப்பரப்பில் சிறு தொழில்கள் துவங்க அல்லது ஒரு தொழிற்பேட்டையை உருவாக்கம் செய்ய அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது பற்றி அரசு பரிசீலனைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு :—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

2. தகவல் கோரல்.

துறைமுகத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தம்

திரு. ரா. உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, துறைமுகத் தொழிலாளர்களின் ஸ்டிரைக் பிரச்சினை இன்னமும் தீர்க்கப்படவில்லை. இது நம்முடைய அரசினுடைய நிர்வாகத்தில் இல்லாவிட்டாலும், அதில் தீர்வு ஏற்படாமல் இருப்பதால், நம்முடைய மாநிலத்தில் ஏராளமான தொழில்களுக்கு வரவேண்டிய ரா-மெட்டீரியல்ஸ் வரவில்லை. தொழில் துறையே ஸ்தம்பித்துப் போகும்படியான நிலை ஏற்பட்டிருக்கிறது. தமிழ் நாட்டினுடைய பல தொழில்களின் பொருளாதாரமும் பெரும் அபாயத்தைச் சந்தித்துக் கொண்டிருக்கிறது.